IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

(DEPOSITION OF WITNESS :பிவாசா.2

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 29.08.2024 is accordance with the provision of Act X of 3331

அசல் வழக்கு எண். 937/2017

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிமலன் கிறிஸ்டோபர் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை/கணவர் பெயர் | ஜார்ஜ் மனோகர் | கிராமம் | சூலூர் |
| தொழில் | சர்வேயர், சூலூர் | மதம் | |
| வயது | | | |

பிவாசா. 2 ஆக 29.08.2024 அன்று ஆஜராகி

முதல் விசாரணை

நான் இந்த நீதிமன்ற அழைப்பாணையின்மூலம் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.என்னிடம் அரசூர் புல எண். 194 பற்றி வருவாய்துறை ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியம் அளிக்க பணிக்கப்பட்டிருந்தது. நான் அரசூர் புல எண் 194 ல் புலவரைபடம் , ஆர்.எஸ்.ஆர்.நகல் ,அ-பதிவேடு, பட்டா மாறுதல் உத்தரவு இணைவழி ஆர்.எஸ்.ஆர்- ஆகியவை எடுத்துவந்துள்ளேன். அதன் அசல் நீதிமன்றத்தில் காட்டி நகல் நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். புலஎண். 194 புலவரைபடம் சாசாஆ.1. ஆர்.எஸ்.ஆர். சாசாஆ.2. அ-பதிவேட்டின் இணையவழி நகல் சாசாஆ.3. பட்டா மாறுதல் உத்தரவு சாசாஆ.4. பட்டா உட்பிரிவு செய்யப்பட்டதற்கான உத்தரவு சாசாஆ.5.

194/4 நெ. உட்பிரிவானது முதன்முதலில் யார்பெயரில் ஏற்பட்டது என்றால் நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தில் முதன்முதலில் மைனர் ஜெயபிரகாசன் , பி.எஸ்.ரத்தினம், ஆகியோர் பெயரில் 0.60.0 ெஹெட்டேருக்கு உட்பிரிவு செய்யப்பட்டது. 194/5, 194/7 உட்பிரிவானது பழனிச்சாமி கவுண்டர்பெயரிலும், 194/6 , 194/8 தெய்வசிகாமணி பெயரிலும் உட்பிரிவாகியுள்ளது. நிலஉடமை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அனுபவத்தின் பெயரிலும் தரப்பினர்கள் தாக்கல் செய்யும் ஆவணத்தின் அடிப்படையில்தான் பட்டா மாற்றம் செய்திருப்போம் என்றால் ஆமாம். தற்பொழுதும் பூமியில் உள்ளதை தவிர வேறு உட்பிரிவுகள் எதுவும் செய்யப்படவில்லை. தற்பொழுது புல எண். 194/4

கே.பி.ஆர். காட்டன் நிர்வாக மேலாளர் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

வாதிதரப்பு குறுக்கு விசாரணை

தற்பொழுதுள்ள ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு கலாய்வு மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். நிலஉடமை மேம்பாட்டு திட்டம் 1984 ல் மேற்கொள்ளப்பட்டது. 1984 நான் இந்த பதவியில் இல்லை. 1984 ல் மைனர் ஜெயபிரகாஷ், ரத்தினம் பெயரில் எதன் அடிப்படையில் 194/4 புலஎண்ணிற்கு உட்பிரிவாகியுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தெரியாது ஆனால் நான் கொண்டுவந்துள்ள ஆவணத்திலும் எதன் அடிப்படையில் உட்பிரிவு ஏற்பட்டது என்ற விவரங்கள் இல்லை. ஆவணங்களில் குறிப்பிட்டு இல்லாத நிலையில் எனது சாட்சியம் பொதுப்படையானது என்றால் ஆமாம். ஜெயபிரகாசம், ரத்தினம் அவர்கள் பெயரில் யூடிஆர் திட்டத்தில் எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மூலஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. எங்களுடைய அலுவலகத்திலுள்ள ஆவணங்களில் உட்பிரிவு பொறுத்து குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். பொதுவாக நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தில் வழஙகப்பட்ட பட்டாக்களில் நிறைய தவறுகள் ஏற்பட்டு முறையாக மனுக்கள் மூலம் திருத்தப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனவே நிலஉடமை மேட்டு திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டா ஒருவர் உரிமை பத்தியத்தை காட்டும் ஆவணமாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் ச ரியல்ல. 194/4 காலைக்கு கே.பி.ஆர் மில்காட்டன் மில் எப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் அதற்கான உத்தரவு என்னிடம் இல்லை. அதற்கு M.T.R கோப்புகள் இருக்கும் என்றால் பட்டா மாறுதல் செய்திருந்தால் இருந்திருக்கும். அவ்வாறு உத்தரவு உள்ளதா என்று பரிசீலனை செய்து பார்த்தால் தான் தெரியும். பொதுவாக ஒருவர் பட்டா மாறுதல் கேட்டால் அவர்களது முன்பாத்தியஸ்தர்கள் உரிமை அவர்களுடைய உரிமை ஆவணங்கள் பரிசீலனை செய்துதான் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்படும். கே.பி.ஆர். காட்டன்மில் இருந்து கே.பி.ஆர். டெவலப்பர் பெயரில் எப்போது பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சாசாஆ.4 ன்மூலம் 8.5.2020 ல் மாற்றம் செய்யப்பட்டது. அந்த உத்தரவில் 8.5.2020 தேதியில் மனு தாக்கல் செய்யப்பட்டதாக உள்ளது. மனுவுடன் என்ன ஆவணங்கள் பரிசீலனை எடுக்கப்பட்டது என்று உள்ளதா என்றால் இல்லை. அந்த உத்தரவில் எம்.டி.ஆர். 2020/0103/12/227399 டி.ஆர்.

தேதியில் 8.5.2020 ஆகும். பொதுவாக பட்டா மாறுதல் மனு செய்தால் பத்திரங்கள் மூலபத்திரங்கள் வில்லங்க சான்றிதழ் ஆகியவற்றை வைத்து பட்டா மாறுதல் செய்வோம். கே.பி.ஆர். டெவலப்பர் பெயரில் பட்டா மாற்றம் செய்யும்போது அந்த நிறுவனம் பெயரில் உரிமை ஆவணம் எதுவும் தாக்கல் செய்தார்களா என்றால் அது இந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை. இணையவழியில் பட்டா மாறுதல் செய்ய ஆரம்பித்த பின்னிட்டு அலுவலகத்தில் எம்.டி.ஆர். பதிவேடுகள் பராமரிக்கப்படுவதில்லை. நான் சொல்வது தவறு என்றும் எம்.டி.ஆர். பதிவேடுகள் பராமரிக்கப்படுவது ஆர்.எஸ்.ஓ. படி கட்டாயமாக ஒன்று என்றால் சரியல்ல. ஒரே நாளில் பட்டா மாறுதலுக்கு இணையவழி யில் மனு கொடுத்து ஒரே நாளில் பட்டா மாறுதல் செய்திருப்பது நிர்வாக ரீதியாக சாத்தியம் இல்லாத காரியம் என்றால் சரியல்ல. ஏற்கனவே கே.பி.ஆர். காட்டன் மில்லில் பட்டா இருந்ததால் கே.பி.ஆர்.டெவலப்பர் பெரியல் பட்டா மாறுதல் செய்து கொடுத்துள்ளனர். கே.-பி.ஆர். நிறுவனம் ஊரில் பெரிய ஆள் என்பதால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி ஒரே நாளில் ஆவணங்களை பரீசீலனை செய்யாமல் சட்டத்திற்கு புறம்பாக பட்டா பெயர் மாற்றம் செய்து பெற்றுள்ளனர். அதற்கு வருவாய்துறை உடனிருந்து செயல்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் இதற்கு முன்பு கே.பி.ஆர்.மில்லில் பெயரில் பட்டா மாறுதால் செய்யும்போது கலாஆய்வு செய்யாமல், ஆவணங்களை பரிசீலன செய்யாமல் பட்டா மாறுதல் உத்தரவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக பட்டா மாறுதல் செய்யதால் எம்.டி.ஆர். பதிவேடு பராமரிக்கப்படுதில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாக ஜெயபிரகாஷ் மற்றும் ரத்தினம் பெயரில் பட்டா மாறும் செய்யும்விதம் ஆவணங்கள் பரிசீலனை செய்யாமல் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலஎண். 194/9 என்பது கூட்டுவண்டிப்பாதை. அதில் வாதி தெய்வசிகாமணி பெயரும் உள்ளது என்றால் ஆமாம். தடம் நிலையில் உள்ளதா என்று நான் இடத்திற்கு சென்று கலாஆய்வு செய்யவில்லை. கே.பி.ஆர்.டெவலப்பர்ஸ் 194/4 புல எண்ணில் 84 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என்றால் எனக்கு பத்திர ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. வருவாய்துறை ஆவணங்களில் 60 ஏர்ஸ் என்று உள்ளது. அதேபோல் வாதிக்கு 194/4 ல் 64 ¼ செண்ட் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 64 செண்ட்டிற்கு வாதிகள் பெயரில் நிலஉடமை மேம்பாட்டு ்திட்டத்தின்கீழ் தவறுதலாக

பெயல் சேர்க்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் அந்த தவறுகள் சரிசெய்ய பலமுறை மனுகொடுத்தும் வருவாய்துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களில் உள்ள பதிவுகள் வாதியின் உரிமையை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல . நான் எந்தவித விவரமும் தெரியாமல் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடியததல்ல என்றால் சரியல்ல.

Sd/நிமலன் கிறிஸ்டோபர்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur